செ.வெ.எண்:196 நாள்:21.03.2018

# திருநெல்வேலி பழைய பேருந்து நிலையத்தில் குழந்தை தொழிலாளர் தடுப்பு மற்றும் குழந்தை திருமண தடைச் சட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வு பேனரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்.

----

திருநெல்வேலி பழைய பேருந்து நிலையத்தில் குழந்தை தொழிலாளர் தடுப்பு மற்றும் குழந்தை திருமண தடைச் சட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வு பேனர் திறப்பு நிகழ்ச்சி இன்று (21.03.2018) நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விழிப்புணர்வு பேனரை திறந்து வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

சமூக பணியாளர் தினத்தை முன்னிட்டு இன்று திருநெல்வேலி பழைய பேருந்து நிலைய வளாக பகுதியில் குழந்தை தொழிலாளர் தடுப்பு மற்றும் குழந்தை திருமண தடைச் சட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு பேனர் வைக்கப்பட்டுள்ளது. இச்சட்டங்களை மீறுவது தண்டனைக்குறிய குற்றமாகும். நரிக்குறவர் இன மக்களிடம் வழிப்புணர்வு ஏற்படுத்த புராஜெக்ட் ஸ்பார்க் திட்டத்தின் மூலம் பல்வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நரிக்குறவர் நல வாரியத்தின் மூலமும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. குழந்தை தொழிலாளர் மற்றும் குழந்தை திருமணங்கள் குறித்து 1098 இலவச தொலைபேசிக்கு தகவல் தெரிவித்தால் உடன் நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்கள் விழிப்புணர்வுடன் குழந்தை தொழிலாளர் தடுப்பு மற்றும் குழந்தை திருமண தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். என பேசினார்.

தொடர்ந்து சைல்டுலயன் 1098 மற்றும் குழந்தை தொழிலாளர் தடுப்பு மற்றும் குழந்தை திருமண தடுப்பு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.இந்திரா, சைல்டுலயன் இயக்குநர் அருட்திரு.ஜெயபாலன், மாவட்ட குழந்தை தொழிலாளர் திட்ட இயக்குநர் திரு.சந்திரகுமார், கள அலுவலர்கள் திரு.ரவிந்திரன், திரு.விஸ்வநாதன் மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.